**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பெருங்காப்பியத்தின் உட்பிரிவுகளை எவ்வாறு குறிப்பர்?
2. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் எது?
3. சிலப்பதிகாரம் கூறும் 3 உண்மைகள் யாவை?
4. மணிமேகலைக் காப்பியத்தின் மூன்று கருத்துகள் யாவை?
5. இந்திரனுக்கு எத்தனை நாள் விழா எடுக்கப்பட்டது?
6. கம்பராமாயணக் காப்பியத்தின் நோக்கம் என்ன?
7. வடமொழியில் தோன்றிய முதல் பாரத நூல் எது?
8. முச்சங்கம் பற்றி விரிவாகக் கூறும் நூல் எது?
9. சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாக விளங்கிய நூல் எது?
10. எட்டுத்தொகையில் அகப்பாடல்கள் யாவை?
11. பேகனின் கொடை எத்தன்மையானது?
12. நிலம் நலம் பெற எவர் நல்லவர்களாக இருக்கவேண்டும்?
13. முல்லை அரும்பாகிய பற்களைக் காட்டித் தலைவியைப் பார்த்துச் சிரித்தது எது?
14. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?
15. அகவன் மகள் என்பவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. சிறுகாப்பியம் என்பதை வரையறுக்க?
2. கண்ணகி வாயிற்காவலனிடம் கூறியது என்ன?
3. விசையை சீவகனுக்குக் கூறிய அறிவுரை யாது ?
4. பாஞ்சாலி சபதம் நூலின் அமைப்பு பற்றிக் குறிப்பிடுக?
5. பதிற்றுப்பத்தில் ஆற்றுப்படைகுறித்துக் குறிப்பிடுக?
6. மலைபடுகடாம் பற்றிக் குறிப்பிடுக?
7. வரைவு கடாதல் என்றால் என்ன?
8. கூடல் இழைத்தல் என்பது பற்றிக் கூறுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சிலப்பதிகாரத்தின் சிறப்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இந்திரவிழா நடத்தப்பட்ட விதம் பற்றிக் கூறுக.

2. (அ) குகன் இராமன் பால் கொண்ட பக்தியினை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிவபெருமான் பால் கண்ணப்பர் கொண்ட பக்தியினைப் புலப்படுத்துக.

3. (அ) முல்லையின் சிறப்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) குறிஞ்சித் திணையின் முப்பொருள் வெளிப்பாடு பற்றி எழுதுக.

****